| முதல் திருப்புதல் தேர்வு - 2024 | | தேர்வு எண் | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| காலம் : 3.00 மணி | XI - விலங்கியல் | மதிப்பெண் : 70 | | | | | | |

பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (15x1=15)
2) சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் சேர்த்து எழுதவும்.

1. மூலக்கூறு வகைப்பாட்டின் கருவியில் இது அடங்கியுள்ளது
அ) டி.என்.ஏ. மற்றும் ஆர்.என்.ஏ.
ஆ) மைட்டோகாண்ட்ரியா மற்றும் எண்டோபிளாசவலை
இ) செல் சுவர் மற்றும் பிளாஸ்மா புரதம்
ஈ) மேற்கூறிய அனைத்தும்

2. கண்ட அமைப்பு இதன் முக்கிய பண்பு
அ) வளைத்தசைப்புழுக்கள் ஆ) முட்தோழிகள்
இ) கணுக்காலிகள் ஈ) குழியுடலிகள்

3. இணைப்புத்திசுவின் தளப்பொருளில் காணப்படும் நாரிழை யாது?
அ) கொலாஜன் ஆ) ஏரியோலார்
இ) குருத்தெலும்பு ஈ) குழல்வடிவ நாரிழை

4. பெரிப்பிளனேட்டாவின் மால்பீஜியன் நுண் குழல்கள் அமைந்துள்ள பகுதி மற்றும் எண்ணிக்கை
அ) நடுக்குடல் மற்றும் பின்குடல் சந்திப்பில் தோராயமாக 150
ஆ) முன்குடல் மற்றும் நடுக்கடல் சந்திப்பில் தோராயமாக 150
இ) அரைவைப்பையினைச் சூழ்ந்து 8
ஈ) பெருங்குடல் மற்றும் மலக்குடல் சந்திப்பில் 8

5. எண்டிரோகைனேஸ் எதனை மாற்றுவதில் பங்கேற்கிறது
அ) பெப்ஸினோஜனை பெப்ஸினாக மாற்றுதலில்
ஆ) டிரிப்ஸினோஜனை டிரிப்ஸினாக மாற்றுதலில்
இ) புரதங்களைப் பாலிபெப்டைடுகளாக மாற்றுதலில்
ஈ) கேசினோஜனை கேசினாக மாற்றுதலில்

6. உயிர்ப்புத் திறன் என்பது
அ) TV+IRV+ERV ஆ) TV+ERV
இ) RV+ERV ஈ) TV+IRV

7. சிரைகளின் இரத்த நுண்நாளப் படுகைகளில் காணப்படும் ஊடுபரவல் அழுத்தம்
அ) நீர்ம அழுத்தத்தைவிட அதிகம்
ஆ) திரவங்களின் நிகர வெளியேற்ற அளவில் முடியும்
இ) திரவங்களின் நிகர உறிஞ்சுதல் அளவில் முடியும்
ஈ) எவ்வித மாற்றமும் நிகழவில்லை

8. போடோ சைட்டுகள் காணப்படுவது
அ) பௌமானின் கிண்ண வெளிச்சுவரில்
ஆ) பௌமானின் கிண்ண உட்சுவரில்
இ) நெஃப்ரானின் கழுத்துப் பகுதியில்
ஈ) கிளாமருலார் இரத்த நுண்நாளங்களின் சுவரில்

9. **கீழே உள்ள வாக்கியம் சரியா/தவறா என கண்டறிந்து சரியான வரிசையைத் தெரிவு செய்.**
1) இடுப்பு எலும்பு இலியம், இஸ்கியம் மற்றும் பூபெலும்பால் ஆனது
2) திருவெலும்பில் அசிட்டாபுலம் குழியுள்ளது
3) அசிட்டாப்புலக் குழியில் தொடை எலும்பின் தலைப்பகுதி பொருந்தியுள்ளது
4) வயிற்றுப் பகுதியில் இடுப்பு வளையத்தின் இரு பகுதிகளும் இணைந்து நாரிழைக் குருத்தெலும்புக் கொண்ட பூப்பெலும்பு இணைவை உண்டாக்குகிறது
அ) 1-சரி, 2-தவறு, 3-சரி, 4-சரி
ஆ) 1-தவறு, 2-தவறு, 3-சரி, 4-சரி
இ) 1-தவறு, 2-சரி, 3-சரி, 4-சரி
ஈ) 1-சரி, 2-சரி, 3-தவறு, 4-சரி

10. ஆக்ஸான் படலத்திற்கிடையேயான மின்னழுத்தம் ஓய்வு நிலை மின்னழுத்தத்தை விட அதிக எதிர் மின்தன்மையுடையதாகக் காணப்பட்டால் நியூரான் எந்த நிலையில் இருப்பதாகக் கருதப்படும்?
அ) மின்முனைப்பியக்க நீக்கம் ஆ) உச்ச மின்முனைப்பியக்கம்
இ) மின்முனைப்பியக்க மீட்சி ஈ) குறை மின்முனைப்பியக்கம்

11. இரத்தச் சீரத்தில் கால்சியம் அளவை நெறிப்படுத்துவது
அ) தைராக்ஸின் ஆ) FSH
இ) கணையம் ஈ) தைராய்டு மற்றும் பாராதைராய்டு



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

12. சிவப்பணுக்களை நீர்க்கச் செய்யும் திரவம்
அ) டார்க்ஸ் திரவம் ஆ) டாய்ஸான் திரவம்
இ) ஹேயம்ஸ் திரவம் ஈ) ஃபோலின் ஃபீனால் திரவம்
13. ஆக்ரோசமாக சண்டையிடும் பண்பு கொண்ட கோழி இனம் எது?
அ) லெக்ஹார்ன் ஆ) சில்க்கி இ) பிராம்மா ஈ) அசீல்
14. ஒரு நாளைக்கு உருவாகும் வடிதிரவத்தின் அளவு
அ) 170லிட்டர் - 200 லிட்டர் ஆ) 170லிட்டர் - 190 லிட்டர்
இ) 170லிட்டர் - 180 லிட்டர் ஈ) 170லிட்டர் - 185 லிட்டர்
15. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவளைப்பற்றிய சரியான கூற்று எது?
அ) பெண் தவளையில் அண்ட நாளம் மற்றும் சிறுநீர் நாளம் இணைந்து காணப்படும்
ஆ) ஆண் தவளையில் சிறுநீர் நாளம் மற்றும் இனப்பெருக்க பாதை தனியாக காணப்படும்
இ) மலக்குடலுக்கு கீழே சிறுநீர்பை காணப்படுகிறது
ஈ) தவளை, யூரிக் அமில நீக்கி ஆகும்

## பகுதி - 2

***குறிப்பு: கீழ்காணும் வினாக்களில் ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 24க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (6x2=12)***

16. கரோலஸ் லின்னேயஸ்-ஐ ஏன் நாம் 'நவீன வகைப்பாட்டியலின் தந்தை' என அழைக்கின்றோம்.
17. எலர்ஸ் - டன்லாஸ் சின்ட்ரோம் என்றால் என்ன?
18. டெர்கம் மற்றும் ஸ்டெர்னம் ஆகியவற்றை வேறுபடுத்துக.
19. BMI - வரையறு.
20. நிமோனியா ஏன் ஒரு ஆபத்தான நோயாக கருதப்படுகிறது.
21. ஆர்த்தோஸ்டேட்டிக் குறை அழுத்தம் என்றால் என்ன?
22. முதுகெலும்பு தொடரின் பணிகளைக் கூறுக.
23. ஸ்டிப்ளிங் என்றால் என்ன?
24. புரத வளர்ச்சிதை மாற்றத்தின் பிற பொருள்கள் யாவை?

## பகுதி - 3

***குறிப்பு: கீழ்காணும் வினாக்களில் ஏதேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 33க்கு கட்டாயமாக விடையளிக்கவும். (6x3=18)***

25. இரத்தம் ஏன் தனித்துவமான இணைப்பு திசு என்று அழைக்கப்படுகிறது.
26. மண்புழு செறிவூட்டப்பட்ட நீர் குறிப்பு வரைக.
27. மெட்ஹீமோகுளோபின் என்றால் என்ன?
28. ஆர்னித்தைன் சுழற்சி படம் வரைக.
29. முனைப்பியக்க மீட்சியின் முடிவில் நரம்பு உறையானது உச்ச முனைப்பியக்கத்தை பெறுகிறது ஏன்?
30. பீனியல் சுரப்பி ஒரு நாளமில்லா சுரப்பி இதன் பணியைப் பற்றி எழுதுக.
31. மீன்களின் உணவு ஊட்ட மதிப்புகள் எவை?
32. குளுக்கோமீட்டரின் மருத்துவ பயன்பாடுகளை எழுதுக.
33. வீச்சு கொள்ளளவு என்றால் என்ன? இவை எவ்வாறு இதயத்தில் இருந்து வெளியேறும் இரத்த அளவுடன் தொடர்புடையது?

## பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்- (5x5=25)***

34. அ) இதயத்துடிப்பு தோன்றல் மற்றும் பரவும் விதத்தினை விளக்குக.
*(அல்லது)*
ஆ) பல்வேறு பாரம்பரிய வகைப்பாட்டு கருவிகள் யாவை? விளக்குக.
35. அ) தவளையின் ஆண் இனப்பெருக்க மண்டலத்தை விவரிக்கவும்.
*(அல்லது)*
ஆ) எலும்பு முறிவு ஏற்படும் விதம் மற்றும் எலும்பு முறிவு குணமாதல் பற்றி விவரி.
36. அ) மனிதனில் காணப்படும் A, B, O இரத்த வகைகளை விவரிக்கவும்.
*(அல்லது)*
ஆ) கார்பன் டை ஆக்சைடு கடத்தப்படுதல் முறையை விவரிக்கவும்.
37. அ) அடினோஹைப்போபைசிஸ் சுரக்கும் ஹார்மோன்கள் பற்றி விளக்குக.
*(அல்லது)*
ஆ) செவியின் அமைப்பை விளக்குக.
38. அ) இயல்பான EEG எவ்வாறு தோன்றுகிறது?
*(அல்லது)*
ஆ) பட்டுப்புழுவின் வாழ்க்கைச் சுழற்சியை விவரி.



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com